# வருடாந்த அறிக்கை 2014

**இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம**

**உள்ளடக்கம்**


| விடயம் | பக்க இல |
|---|---|
| 01. தலைவரின் கண்ணோட்டம் | 03 |
| 02. தொலைநோக்கு | 04 |
| 03. குறிக்கோள் | 05 |
| 04. வருடாந்த அறிக்கை | 06 |
| 05. பணிப்பாளர் சபை | 07 |
| 06. இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வரலாறு | 08-10 |
| **07. முந்தைய ஐந்து ஆண்டுகளில் நிதி சிறப்பம்சங்கள்** | 11 |
| 08. துறைமுகங்களின் செயலாற்று | 12-17 |
| 09. கணக்கியல் கொள்கை | 18-19 |
| 10. நிதிக் கட்டமைப்பு | 20-33 |
| 11. நிதிப் பெறுபேறு | 34 |
| 12. கணக்காய்வு அறிக்கை | 35-54 |

# 01.தலைவரின் கண்ணோட்டம்



சமுத்திர சூழல் பாதுகாப்பு, கடல்சார் கிராமங்களின் பாதுகாப்பு, படகு மற்றும் கடல் பயணம் பாதுகாப்பான அடிப்படை வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் வழங்குதல் போன்றவை எமது நடவடிக்கைத் துறைக்குள் எமது பல்வேறு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி இலங்கை துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் (CFHC) தனது சகல நடவடிக்கைகளையும் அபிவிருத்தி செய்து வருகிறது. இதற்கு நாடு முழுவதிலும் அமைந்துள்ள 20 துறைமுகங்கள் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்து அதன்போது சகல சேவைகளையும் வலுவுடன் செயற்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

அரச நிறுவாக தேவைக்கு அமைவாக, 2014ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை சம்பந்தமாக விபரமான தகவல் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவற்றில் சிலவற்றில் அவதானம் செலுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதற்கமைய தற்போது செயற்படுத்தப்பட்டுவரும் மிகவும் சிறந்த வேலைத் திட்டமான துறைமுகத்தின் தேவைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் பசுமை துறைமுக எண்ணகருவை இனம் காணல். இந்த அபிவிருத்தி நடவடிக்கைக்கு எமது அனுகூலமான வினைத் திறனான உதவி கிடைக்கப் பெற்றுளளது.

தற்போது எம்மால் அணுகி வெற்றிகரமாக இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் (CFHC) தலைவர் என்ற ரீதியில் நான் ஆதரவு நல்கி செயலறவுடனாக அத்துடன் எதிர்கால முதலீட்டாளர்களுக்கு உசிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை மற்றும் முகாமையாளருடன் இணைந்து ஆக்கத்திறனான நடவடிக்கை எடுப்பேன்.

எமக்கு கிடைக்கும் நிரந்தர ஒத்துழைப்புக்கு கௌரவ அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களுக்கு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, சவாலுக்குள்ள கால எல்லைக்கு தேசிய தொகுதிக்கு அனைத்து சேவை வழங்கும் பொறுப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கான இந்த சந்தர்ப்பத்திலும் இதற்கு வழங்கும் உதவிக்கு இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் ஆளணியினர்களுக்கு பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**அமரானந்த அபேகுணசேகர**
தலைவர் - இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

## 02.தொலைநோக்கு

கடற்றொழில் துறையில் அடிப்படை வளமாகமைந்து உள்நாட்டு மீனவ சமூகத்தினரிடையே புதியதோர் விழிப்புனர்வு ஏறபடுத்திகொண்டு மண்டலத்தில் கடல் சார்ந்த மீன்ப்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்களுக்கு உயர்ந்த தரத்தில் தலைசிறந்த வசதிகளை வழங்குனராக ஆகுதல்.

## 03.குறிக்கோள்

கடற்றொழில் துறைமுகஙகள் சம்பந்தப்பட்ட சிறந்த சேவைகளை வழங்குவதற்கும் தேவையான கட்டடமைப்புகளுடன் தலைசிறந்த உயா்ந்த தரத்திலான நவீன வசதிகளை மீனவ சமூகத்திற்கு வழங்குவதும், துறைமுகங்களை தரம் உயர்த்தி வர்தக ரீதியாக நிலைத்திருக்கக்கூடிய முயற்சிகளால் தன்னிறிறைவு அடைதல்.

## 04. வருடாந்த அறிக்கை

### இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தன்மை மற்றும் நோக்கம்

- 1957ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2வது உப பிரிவின் (1) வது உப பிரிவுக்கு அமைய 11.02.1972 ஆந் திகதிய 14,996/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி பத்திரிகையின் அறிவித்தலுக்கு அமைய 1972.04.01 ஆந் திகதியன்று இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தபானம் நிறுவப்பட்டது.

**நோக்கங்கள ் :-**

1. கடற்றொழில் நடவடிக்கைகளுக்கான கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்கள், மற்றும் கடல் அமைப்புக்கள் போன்றவற்றிகுத் தேவையான கரையோர வசதிகளை திட்டமிடுதல், திட்டங்களை தயாரித்தல், மற்றும் நிர்மானித்தல்.

2. கடற்றொழில் நடவடிக்கைகளுக்கான கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்கள், மற்றும் கடல் அமைப்புக்கள் போன்றவற்றிகுத் தேவையான கரையோர வசதிகளை ஏற்படுத்துதல், செயற்படுத்துதல், நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல்.

3. கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்கள் மற்றும்ஏனைய கரையோர வசதிகளை முகாமைத்துவம் செய்தல், பராமரித்தல் மற்றும் அதன் நடைமுறை நடவடிக்கை.

4. கடற்றொழில் கலங்களுக்கான திருத்த வேலைகள் மற்றும் அதன் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.

5. குளிரூட்டல் அறை, பனிக் கட்டி உற்பத்தி இயந்திரத் தொகுதி மற்றும் ஏனைய குளிரூட்டும் வசதிகளை ஏற்படுத்தல், நடைமுறைப் படுத்தல் மற்றும் அதனைப் பராமரித்தல்.

6. நீர் வழங்கல், எரிபொருள் விநியோகம், மசெகெண்ணை வழங்கல், மின்சார விநியோகம், பனிக் கட்டி விநியோகம், குளிரூட்டும் வசதி செய்து கொடுத்தல் கடற்றொழில் கைத்தொழில் துறைக்குப் பொருத்தமான மற்றும் கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான ஏனைய சேவைகளை வழங்கல்.

7. கடற்றொழில் துறைமுகங்கள் நங்கூரமிடும் தளங்கள், கடல் அமைப்புக்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் ஏனைய நிறுவனங்களுக்குப் பாதுகாப்புச் சேவை வழங்கல் அத்துடன் அதற்கான கட்டணம், வாடகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை அறவிடுதல்.

8. கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கான விமர்சனம் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

9. கூட்டத்தாபனத்தின் மூலம் கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் தளங்களில் கடற்றொழில் கலங்களுக்கும் கடற்றொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கும், ஏனைய தனிப்பட்ட சமூகத்தினர்களுக்கும் வழங்கப்படும் வசதிகள், சேவைகள் சார்பாக துறைமுகக் கட்டணம், கலங்கரை விளக்குக் கட்டணம், தடாகக் கட்டணம், படகு உள் நுழைவுக் கட்டணம் போன்றவற்றைத் தீர்மானித்தல் மற்றும் அவைகளை அறவிடல்.

## 05. பணிப்பாளர் சபை

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் தலைவர் உட்பட பணிப்பாளர்களாக ஏழு (07) பேர் கடமையாற்றுகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு உபாலி லியணகே | தலைவர் |
| 2 | திரு **நீல் முனசின்ஹ்** | முகாமைத்துவ பணிப்பாளர் |
| 3 | திரு. சேளாமதிலக | பணிப்பாளர் |
| 4 | திரு. கே. டீ. நந்தசேன | பணிப்பாளர் |
| 5 | திரு. டபிள்யு. ஏ. சீ. ஹேமகுமார | பணிப்பாளர் |
| 7 | திரு. டபிள்யு. ஆர். என். ஹேமகுமார த சில்வா | பணிப்பாளர் |
| 8 | திரு ஜி.ஜி.பி. அபேசேகரபொதுமேலாலா் | பாா்வையாலா் உறுப்பினா் |

திருமதி நயனா கருளாரத்ன தற்காலிக கசெயலாளர் பணிப்பாளர்சபை

| | | |
|---|---|---|
| கணக்காய்வாளர் | - | கணக்காய்வுத் திணைக்களம் |
| வங்கியாளர் | - | இலங்கை வங்கி |
| | | மக்கள் வங்கி |

## 06. இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வரலாறு

இலங்கை அரசின் கீழ் செயற்பட்ட கடற்றொழில் ஆணைக் குழு கடற்றொழில் துறைமுகங்கத்தின் நீர்த்தடுப்பு அணைக்கட்டு நிர்மானிக்கப்பட்டதுடன், அதில் முதலாவது துறைமுகம் பேருவளை கடற்றொழில் துறைமாகும். 1980 ஆம் ஆண்டில் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் சகல வர்த்தக நடவடிக்கைகளை மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு மற்றும் தனியார் பிரிவினருக்கு மாற்றுவதற்கு திர்மானிக்கப்பட்டது. இங்கு கடற்றொழில் துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் தளங்கள், திட்டமிடுதல் மற்றும் நிர்மானித்தல், கடல் வலயங்களைப் பராமரித்தல், நிர்மான நடவடிக்கை பொருளாதார மேற்பார்வை பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு கடற்றொழில் துறைமுகங்கள் அகழ்வு நடவடிக்கை போன்றவற்றை இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகிறது.

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் 1991ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட போது கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 129 வரை குறைப்பக்கட்டது. பின்பு திரும்பவும் கடற்றொழில் துறைமுகங்களை தற்கால தேவைகளுக்கு ஏற்றதாக்குவதற்கு நிர்மான பணிகளை ஆரம்பித்தல், புதிய கடற்றொழில் துறைமுகங்களை நிர்மானித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டதினால் இவைகளுக்கு உட்பட கூட்டுத்தாபனத்திற்கு தேவையான ஊழியர் எண்ணிக்கையை கணணித்து வகைப் படுத்தி, ஊழியர் எண்ணிக்கையை 1015 வரை உயர்த்துவதற்கு 2013 ஆண்டில் திறைசேரியின் அனுமதி பெறப்பட்டது. 1994ஆம் ஆண்டின் இறுதியில் போது இந்த நிறுவனத்தக்கு உரித்தாக இருந்த துறைமுகங்கள் 10 உம், 25 நங்கூரமிடும் தளங்கள் வரை விருத்தி அடைந்திருந்தது. 1995 இலும் ஆசிய அபிவிருத்தி வங்கி (யுனுடீ) உதவியில் பேருவளை, காலி, மிரிஸ்ஸ, புரணவெல்ல மற்றும் கிரிந்த ஆகிய கடற்றொழில் துறைமுகங்களுக்கு புதிய முகாமைத்துவ கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. திறந்த உள் நுழைவு முறையை நிறுத்தி, இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் புதியதோர் முகாமைத்துவ முறைக்கு காலடி வைத்துடன், துறைமுகங்கள் முகாமையாளர்களின் கீழ் நிர்வகிக்கும் செயல்முறைமையொன்றை ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், எல்லை மதில்கள் நிர்மானித்தல், பாதுகப்பு சேவைகளை செயற்படுத்தல், மற்றும் கடற்றொழில் துறைமுகங்களை முறையாக பயன்படுத்தல் போன்றவற்றை முகாமைபடுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. புதிய முகாமைத்துவ வலய பிரதிபலனாக துறைமுகங்களின் எல்லை மதில் நிர்மானித்தல், பாதுகாப்பு சேவை நடைமுறைப்படுத்தல், துறைமுகங்களின் பாவனை சம்பந்தமாக நிர்வாகத்தை கொண்டு செல்லல் போன்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

2004 திசெம்பர் 26 ஆந் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தபானம் மிகவும் கவலைக்கிடமான நிலைக்கு தள்ளப்பட்டது. சுனாமி அனர்த்தம் காரணமாக இலங்கையைச் சுற்றி நடைமுறைப் படுத்தப்பட்ட 12 துறைமுகங்களில் 10 கடற்றொழில் துறைமுகங்களுக்கு (பாணந்துறை, பேருவளை, ஹிக்கடுவை, காலி, ,மிரிஸ்ஸ, மிரிஸ்ஸ, புராணவெல்ல, தங்காலை, குடாவெல்ல மற்றும் கிரிந்த) மேல் முற்றாக நாசமாகியது. கரையோர கட்டமைப்பு வசதிகள், கடல் கட்டமைப்புக்கள், கடலளை தாங்கிகள், மனல் தாங்கிகள் உட்பட பல கட்டமைப்பு போன்ற ஏராளமான வசதிகள் சுனாமி அனர்த்தத்தினால் பெரிதும் சேதமடைந்தது. கடற்றொழில் துறைமுகங்கத்திற்கு சொந்தமான வெலிகொவ்வா மனல் வாரி இயந்திரமும் சேதத்திற்குள்ளாகியது. இந்த சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த 10 கடற்றொழில் துறைமுகங்களின் புனர் நிர்மான பணிகள் மற்றும் புதிய நிர்மான நடவடிக்கைகள், நங்கூரமிடும் தளங்கள், கடல் அமைப்புக்கள் மற்றும் ஏனைய கரையோர வசதிகளை புதிதாக நிர்மானிக்கும் பணி உட்பட ஏராளமான புனர்நிர்மான பணிகளை கீழ் காணும் அரசயங்கள் மறறும் மற்றைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டது.

**USAID உதவி:** ஹிக்கடுவை, மிரிஸ்ஸ, மற்றும் புராணவெல்ல கடற்றொழில் துறைமுகங்கங்களின் புனர்நிர்மான பணிகள் மற்றும் கிரிந்த கடற்றொழில் துறைமுகங்கத்தின் கனரக வாகனங்கள் திருத்தல் வேலைகள் மற்றும் துறைமுகங்கத்தின் தொட்டிலில் ஆழத்தை மணல் வாரிசெய்யும் நடவடிக்கைகள்.

அமெரிக்க டொலர் மிலியன் 13.

**சீன மக்கள் குடியரசு:**

பாணந்துறை பேருவளை குடாவெல்ல கடற்றொழில் துறைமுகங்கங்களின் புனர்நிர்மான பணிகள் மற்றும் சீர்திருத்தல் வேலைகள்.

ருபா மிலியன் 900.

**ஜப்பானிய அரச உதவி:**

காலி மற்றும் தங்காலை கடற்றொழில் துறைமுகங்கங்களின் புனர்நிர்மான பணிகள் மற்றும் சீர்திருத்தல் வேலைகள்.

ருபா மிலியன் 700.

**World Vision உதவி:**

கிரிந்த கடற்றொழில் துறைமுகங்கத்தின் புனர்நிர்மான பணிகள்

அமெரிக்க டொலர் மிலியன் 10.

**UNDP உதவி:**

கிரிந்த, கொட்பே, மற்றும் குடாவெல்ல ஆகிய கடற்றொழில் துறைமுகங்கங்களின் தங்குமிட வசதிகள், சுகாதார வசதிகள் சீர்திருத்தல் வேலைகள் மற்றும் தங்காலை, புராணவெல்ல, மிரிஸ்ஸ, காலி, ஹிக்கடுவை, பேருவளை, முகத்துவாரம், கல்பிட்டி, கொட்பே, மற்றும் குடாவெல்ல ஆகிய கடற்றொழில் துறைமுகங்களுக்கு டராக்டர்கள் மற்றும் ஜெனரேட்டர்களை வழங்குதல்.

ரூபா மிலியன் 159.

**Nestle lanka உதவி:**

கொட்பே, காலி, மற்றும் நீர்கொழும்பு கடற்றொழில் துறைமுகங்களுக்கு மீன் வளை பின்னும் மண்டபம், தன்னீர் கலஞ்சிய படத்தும் டாங்கிகள், தங்குமிட விடுதிகள், உள் நெடுஞ்சாலைகள் புனர்நிர்மான பணிகள்.

ரூபா மிலியன் 60.

**ADB/GOSL உதவி:**

ஹம்பான்தொட்டை, அம்பலாங்கொடை மற்றும் சிலாபம் கடற்றொழில் துறைமுகங்களை எல்லா வசதிகளையும் கொண்ட பூரனமான துறைமுகங்களாக அமைப்பது.

ரூபா மிலியன் 1027.

**ஜயிஸ்லாண்ட் உதவி:**
**ICEIDA**

25 நங்கூரமிடும் தளங்களை சீர்திருத்தல்.

ரூபா மிலியன் 119.

**ADB/TARP**
**நிதி ஏற்பாடு** :

07 நங்கூரமிடும் தளங்களை மேம்படுத்தல்.

ரூபா மிலியன் 411.

**ADB/GOSL**

| | | |
|---|---|---|
| **NECCDEP** | : | வாழச்சேனை கடற்றொழில் துறைமுகத்தின் புனர்நிர்மான பணிகளும் நவீனமய படுத்தும் நடவடிக்கைகள், கொட்பே கடற்றொழில் துறை முகத்தின் நவீனமய படுத்தும் நடவடிக்கைகளூடாக புதிய மேடை கட்டிடம் ஒன்றை அமைப்பது, எரிபொருள் வழங்கும் வசதிகளை சீர்செய்தல், மற்றும் துறைமுகத்தின் தொட்டில் அளவை அதிகரித்தல்.<br><br>ரூபா மிலியன் 590. |
| **கிரீக்க அரசின் உதவி:**<br><br>Helanic Aid | | தொடன்துாவ மற்றும் நீர்கொழும்பு புதிய கடற்றொழில் துறைமுகங்களை நிர்மானித்தல்.<br><br>ரூபா மிலியன் 120. |
| FAO **உதவி**<br>CIDA | : | 80 நங்கூரமிடும் தளங்களை சீர்திருத்தல், இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தபானத்தின் தொழில்நுட்ப பயிற்சி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்.<br><br>அமெரிக்க டொலர் மிலியன் 4.7. |
| IFAD | : | 03 நங்கூரமிடும் தளங்களை சீர்திருத்தல் மற்றும் 18 சிறிய துறைமுகங்களை அபிவிரத்தி செய்தல் மற்றும் நில்வெல்ல மற்றும் சுதுவெல்ல ஆகியவை கடற்றொழில் துறைமுகங்களாக அபிவிரத்தி செய்தல்.<br><br>அமெரிக்க டொலர் மிலியன் 12 |
| **சீன மக்கள் குடியரசு உதவி:** | | பாணந்துறை கடற்றொழில் துறைமுகத்தின் தெற்கு அலை தாங்கியை 340 மீட்டர்களாக நீடிப்பது.<br><br>ரூபர் மிலியன் 575. |

நேதர்லாந்து (ORET/GOSL) உதவித் திட்டத்தின் கீழ் (யுரோ மிலியன் 53) செலவில் சகல நவீன வசதிகளுடனமைக்கப்பட்ட பூரனமான கடற்றொழில் துறைமுகமாக திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகத்தை 2013 ஆம் ஆண்டில் கடற்றொழில் துறைமுக வல அமைப்புக்கு சேர்க்கப்பட்டது.

சர்வதேச தரத்திற்கும் நியமங்களுக்கமைய சீர்திருத்தப்பட்ட கரையேறுதல், மீன் இறக்குதல், மீன் பரிகரிப்பு, மீன் பொதிகட்டுதல் உள்ளிட்ட ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கான சகல வசதிகளுடன் இந்த திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகத்தை நிர்மானிக்கப்பட்டுள்ளது. இதனூடாக முகத்துவார கடற்றொழில் துறைமுகத்தில் நிலவிய பற்றாகுறைகளை சமாளிக்கப்படுவதுடன், விமான நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளமை, நீர்கொழும்பு கடற்றொழில் துறைமுகத்தினூடாக செயற்பட்ட மீன்வர்களுக்கு சிறந்த சுகாதார வசதிகளுடனமைந்த கரையிறங்கும் வசதிகளும் பிரதான மீன் சந்தைப்படுத்தும் விற்பனை நிலையங்களுக்கு அருகில் பாதுகாப்பான நங்கூரமிடும் வசதிகள் போன்றவை கிடைக்கப்படுகின்றன.
குப்பை மற்றும் கழிவு நீர்களும் சுகாதார முறைப்படி வெளியேற்றி முகாமை படுத்துதலுக்கான விசேடமான தொழில்நுட்ப வசதிகள் இந்த துறைமுகத்தில் அமைந்துள்ளமை சிறப்பு அம்சமாகும்.

## 07. முந்தைய ஐந்து ஆண்டுகளில் நிதி சிறப்பம்சங்கள்

### இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூடுத்தாபனம்

**திரட்டிய இலாப நட்டக் கணக்கு**

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருவாய் -மீண்டும்வரும் திறைசேரி கொடை | 313,400,000 | 108,000,000 | 108,780,000 | 113,000,000 | 105,000,000 |
| வருவாய் - மூலதன கொடை மீண்டும்வரும் | 54,651,981 | 55,441,170 | - | - | - |
| தொழிற்பாட்டு பெறுபேறுகள் | 42,667,125 | 293,162,663 | 136,414,518 | 128,929,087 | 106,467,588 |
| வாகன விற்பனை மூலம் பெற்ற இலாபம் | 2,778,629 | - | - | - | - |
| | **413,497,735** | **456,603,833** | **245,194,518** | **241,929,087** | **211,467,588** |
| இயக்க லாபம் இல்லை | | | | - | 325,333.33 |
| ஊழியர் கிரயம் | (221,895,059) | (195,030,798) | (172,684,171) | (137,283,120) | (107,105,252) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | | | | | |
| நிறுவனச் செலவீனம | (11,414,004) | (10,773,544) | (9,594,293) | (9,060,829) | (7,685,264) |
| நிர்வாகச் செவீனம | (260,347,488) | (248,867,716) | (255,321,679) | (231,411,282) | (197,325,441) |
| திருத்தல், பராமரிப்பு செலவீனம் | (46,951,177) | (29,935,298) | (50,184,405) | (41,408,090) | (49,316,920) |
| துறைமுக செலவுகள் | | | | (3,064,760) | (6,924,891) |
| **செயற்பாட்டு இலாபம் (நட்டம்)** | **(127,109,993)** | **(28,003,523)** | **(242,590,030)** | **(180,298,995)** | **(156,564,848)** |
| நிதிச் செலவீனம் | (8,924,747) | (13,507,848) | (16,236,642) | (10,349,232) | (7,749,959) |
| செயற்பாடற்ற செலவினங்கள் | | | | | |
| சேததுக்குள்ளான வாகனகள்மூலம் ஏற்பட்ட | (826,554) | | | | |
| **வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்)** | **(136,861,294)** | **(41,511,370)** | **(258,826,672)** | **(190,648,226)** | **(164,314,807)** |

### இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூடுத்தாபனம்

**முந்தைய ஐந்து ஆண்டுகளில் நிதி சிறப்பம்சங்கள்**

| | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| செயற் பாட்டு வருமானம் | | | | | |
| வருமான வருமானம் - தலைமை அலுவலகம் | - | - | 18,000 | 600,000 | 15,348,109 |
| வாடகை வருமானம் - வெலிகொவ்வா | 9,449,009 | 6,653,571 | 1,800,000 | - | - |
| வாடகை வருமானம் - சயுரி | - | - | - | - | - |
| தள்ளுபடி | - | - | - | - | - |
| வட்டி வருமானம் | 44,860 | 43,756 | 661,872 | 540,413 | 917,755 |
| திருப்பி கொடுக்கபடாத டெண்டர் வைப்பு | 299,500 | 139,500 | 304,500 | 644,557 | 1,007,978 |
| செயற் பாட்டு வருமானம்- துறைமுகம் | 6,981,337 | 71,470,737 | 44,767,038 | 79,920,996 | 36,361,775 |
| பாதுகாப்பு சேவை திட்டதினுடாக வருமானம் | 12,877,992 | 13,024,662 | 12,887,784 | 12,534,798 | 9,980,059 |
| CCD கடலோர பாதுகாப்பு வருமானம் | 737,347 | 1,008,000 | 2,221,100 | 5,292,000 | 1,233,702 |
| NAQDA கடலோர பாதுகாப்பு வருமானம் | - | - | 4,408,740 | 13,631,216 | 466,651 |
| தண்டனை பனமும் கூடுதலான அறவிடுதல் | 4,866 | 85,345 | 16,065 | 43,940 | 185,161 |
| வழுங்குனர்கள் பதிவு வருமானம் | 768,500 | 114,000 | 259,250 | 527,247 | - |
| கணக்கெடுப்பு வருமானம் | - | - | - | 684,701 | - |
| மணல் வாரி வருமானம் | 2,534,262 | 34,819,490 | 72,906,521 | 12,999,975 | 36,511,424 |
| | - | - | - | 16,597 | - |
| பட்டறை விழைவு - பேருவலை | (13,345,473) | (11,262,259) | (11,586,400) | (11,826,701) | - |
| கடன் வட்டி | - | - | - | - | - |
| ஏனைய வருமானம் | 22,314,924 | 177,065,860 | 7,750,049 | 13,319,348 | 4,454,974 |
| | **42,667,125** | **293,162,662** | **136,414,519** | **128,929,087** | **106,467,588** |

## 08. துறைமுகங்களின் செயலாற்று

# HARBOURS LOCATIONS



**1. முகத்துவார கடற்றொழில் துறைமுகம் (1965)**

2.3 ஹெக்டயர் தொட்டிப் பரப்பைக் கொண்ட முகத்துவாரம் கடற்றொழில் துறைமுகத்தின் ஆழம் 4-5 மீற்றர் ஆகும். மேடைக் கட்டின் நீளம் 128.7 மீற்றர் மற்றும் துறைமுக வாவியின் ஆழம் 6-8 மிற்றராகும்.

முகத்துவராத்தில் நங்கூரமிடும் மற்றும் வசதி பெறும் கடற்றொழில் கலங்களில் பெரும்பாலானவை வெளி நாட்டு நிறுவனங்களுக்கு உரியதாகும். இக் கடற்றொழில் துறைமுகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கலங்களுக்கு நங்கூரமிடும் வசதிகள், நீர் மற்றும் மின்சாரம், எரிபொருள், மசகுப் பொருள்கள் மற்றும் எரிவாய்வு விற்பனைகளுக்கு மேலதிகமாக வெளி நாட்டு கலங்களுக்கு காய்கரிவகைகள், பழங்கள் மற்றும் குளிர் நீா போன்றவற்றை பெற்றுக்கொடுப்பதன் மூலம் வருமானம் சம்பாதிக்கப்படுகின்றன.

2013 ஆண்டு பிற்பகுதியில் முகத்துவராத்தில் வழங்கப்பட்ட சேவைகளை திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகத்திற்கு மாற்றப்பட்டது.

**2. பாணந்துறை கடற்றொழில் துறைமுகம் (1998)**

பாணந்துறை கடற்றொழில் துறைமுகத்தின் ஆழம் 2 மீற்றர் மற்றும் மேடைக் கட்டின் நீளம் 75 மீற்றராகும். கடற்றொழிளாலா்களுக்கு காரியாலய வசதிகள், நங்கூரமிடும் வசதிகள், நீர் மற்றும் மின்சாரம், எரிபொருள், பனிக்கட்டி போன்ற வசதிகளை வழங்கி இத்துறைமுகம் வருமானத்தை சம்பாதிக்கின்றது. அதிகப் பட்ச வருமானம் மனல் விற்பனையால் கிடைக்கப்படுகின்றது.

**3. பேருவளை கடற்றொழில் துறைமுகம் (1965)**

10 ஹெக்டயர் தொட்டில் பரப்பளவைக் கொண்ட பேருவளை கடற்றொழில் துறைமுகத்தின் ஆழம் 2.5 மீற்றராகும். இத் துறைமுகத்துக்குச் சொந்மதமான நிலப் பரப்பு 7.05 ஹெக்டயர் ஆகும். மேடைக் கட்டின் நீளம் 215 மீற்றராகும். கடற்றொழிளாலா்களுக்கு காரியாலய வசதிகள், நங்கூரமிடும் வசதிகள், நீர் மற்றும் மின்சாரம், எரிபொருள், பனிக்கட்டி போன்ற வசதிகளை வழங்கி இத்துறைமுகம் வருமானத்தை சம்பாதிக்கின்றது. அதிகப் பட்சமான வருமானம் எரிகொருள் விற்பனையால் கிடைக்கப்படுகின்றது.

**4. அம்பலாங்கொடை கடற்றொழில் துறைமுகம் (2010)**

அம்பலங்கொடை கடற்றொழில் துறைமுகத்தின் தொட்டில் பரப்பளவு ஹெக்டயர் 6.4 ஆழம் 3.5 மீற்றராகும் மேடைக் கட்டின் நீளம் மீற்றா் 112 ஆகும்.

**5. ஹிக்கடுவை கடற்றொழில் துறைமுகம் (2001)**

ஹெக்டயர் 6.3 தொட்டில் பரப்பளவைக் கொண்ட ஹிக்கடுவை கடற்றொழில் துறைமுகத்தின் ஆழம் 2.5 மீற்றராகும். மேடைக் கட்டின் நீளம் 135.9 மீற்றராகும். இத் துறைமுகத்துக்குச் சொந்தமான நிலப் பரப்பு 2.94 ஹெக்டயர் ஆகும்.

மீளாய்வு வருடத்திற்குள் துறைமுக அலுவலக நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுடன் நீர், மின்சாரம் மற்றும் எரிபொருள் மற்றும் கரையோர வசதிகளை கடற்றொழிளாருக்கு வழங்கப்பட்டு வருமானத்தை பெறப்பட்டுள்ளது. மற்றைய வருமானங்களை நோக்கும் போது மனல் விற்பனை மூலம் பெறுவவை அதிகமானதாகும்.

**6. தொடந்துவ கடற்றொழில் துறைமுகம். (2010)**

மீளாய்வு வருடத்தில் நீர், எரிபொருள் ஐஸ் மற்றும் மின்சாரம் விற்பனை போன்றவற்றினால் கிடைத்த வருமானம் மிக முக்கியமானதாகும். மனல் விற்பனை மூலம் கனிசமான வருமானம் பெற்பட்டது.

**7. காலி கடற்றொழில் துறைமுகம் (1965)**

04 ஹெக்டயர் தொட்டில் பரப்பளவைக் கொண்ட காலி கடற்றொழில் துறைமகத்தின் ஆழம் 03-06 மீற்றராகும். இத் துறைமுகத்துக்குச் சொந்தமான நிலப் பரப்பு 1.5 ஹெக்டயர் ஆகும். இத் துறைமுகம் 304 மீறறர் நிளமான இரு மெடைக் கட்டுகளையும் கொண்டதோடு, 91 மீற்றர் நீளமான சேவை இறங்கு துறையும் (ஜெட்டி) இத் துறைமுகம் வசம் உள்ளது.

காலி கடற்றொழில் துறைமுகம் வழங்கும் கடலோர சேவைகள் மத்தியில் நீர், மின்சாரம் மற்றும் எரிபொருள் மற்றும் கரையோர வசதிகள் முக்கியமானதுடன் இதனூடாக கனிசமான வருமானம் பெறப்படுகின்றது.
மீன் ஏல விற்பனை மன்டப வசதிகள், மீன் வலை பின்னும் மன்டப வசதிகள், சிற்றூண்டிச்சாலை மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவை வழங்கப்படும் மற்றைய வசதிகளாகும்.

மீளாய்வு வருடத்தின் துறைமுகத்தின் வருமானங்களில் நங்கூரமிடும் கட்டணம் மற்றும் நுழை வாயில் அனுமதிக் கட்டணம், விற்பனை மூலம் பெறும் வருமானம், கலம் உயர்த்தும் வருமானம், எரிபொருள், நீர், மின்சாரம் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் மற்றும் வரி மூலம் கிடைக்கும் வருமானங்கள் முக்கிய இடம் பெறும்.

**8. மிரிஸ்ஸ கடற்றொழில் துறைமுகம் (1966)**

மிரிஸ்ஸ கடற்றொழில் துறைமுகத்தின் தொட்டில் பரப்பளவு 07 ஹெக்டரும், 2.44 ஹெக்டயர் நிலப் பரபக்பையும் கொண்டது. துறைமுகத்தின் ஆழம் 2.5 மீற்றராகும் மேடைக் கட்டின் நீளம் 355 மீற்றராகும்.

மீளாய்வு வருடத்திற்குள் நங்கூரமிடும் வசதிகள் கட்டணம், மின்சாரம், எரிபொருள் மற்றும் நீர் விற்பனை மூலம் வருமானம் பெறப்பட்டதுடன் தனியார் துறையினரின் பணிக்கட்டி இயந்திரம் மூலம் துறைமுகத்தின் பணிக்கட்டி தேவைகளைப் பூர்த்திசெய்யப்பட்டது.

**9. புராணவெல்ல கடற்றொழில் துறைமுகம் (1980)**

புராணவெல்ல கடற்றொழில் துறைமுக தொட்டியின் பரப்பளவு 14.2 ஹெக்டயர் ஆகும். துறைமுகத்தின் ஆழம் 2.5 மீற்றராகும். இத் துறைமுகத்துக்குச் சொந்தமான நிலப் பரப்பு 4.96 ஹெக்டயர் ஆகும். 265 மீற்றர் நீளமான மேடைக் கட்டு ஒன்று இத் துறைமுகத்துக்கு உரியதாகும்.
எரிபொருள் மற்றம் நீர் விற்பனை, நங்கூரமிடும் கட்டணம், நுழை வாயில் அனுமதிக் கட்டணம், மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவை இத்துறைமுகத்தின் வருமானங்களாகும்.

**10. குடாவெல்ல கடற்றொழில் துறைமுகம் (1998)**

13.1 ஹெக்டயர் தொட்டில் பரப்பளவைக் கொண்ட குடாவெல்ல கடற்றொழில் துறைமுகத்தின் ஆழம் 2.5 முதல் 3.00 வரையான மீற்றராகும். மீளாய்வு வருடத்தில் இத் துறைமுகத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீர், மின்சாரம், எரிபொருள் வழங்குதல் மற்றும் நங்கூரமிடும் வசதிகள், நுழை வாயில் அனுமதி வசதிகள் போனற வசதிகளை வழங்குவது மூலம் துறைமுகம் வருமானத்தை பெறுகிறது.

**11. சுதுர்வெல்ல கடற்றொழில் துறைமுகம் (2013)**

புதிய கடற்றொழில் துறைமுகமான சுதுர்வெல்ல துறைமுகம் கடற்றொழிளாலர்களுக்கு கடலோர வசதிகளை பெற்றுகொடுப்பதுடன் நங்கூரமிடும் வசதிகள், நுழை வாயில் அனுமதி வசதிகள் மற்றும் நீர், மின்சாரம், எரிபொருள் அகிவை பெற்றுக்கொடுப்பதன் மூலம் வருமானத்தை பெறுகிறது.

**12. நில்வெல்ல கடற்றொழில் துறைமுகம் (2012)**

புதிய கடற்றொழில் துறைமுகமான நில்வெல்ல துறைமுகம் கடற்றொழிளாலர்களுக்கு கடலோர வசதிகளை பெற்றுகொடுப்பதுடன் நங்கூரமிடும் வசதிகள், நுழை வாயில் அனுமதி வசதிகள் மற்றும் நீர், மின்சாரம், எரிபொருள் அகிவை பெற்றுக்கொடுப்பதன் மூலம் வருமானத்தை பெறுகிறது.

**13. தங்காலை கடற்றொழில் துறைமுகம் (1965)**

2.5 ஹெக்டயர் தொட்டில் பரப்பளவையும் 2.5 மீற்றர் ஆழத்தையும் கொண்ட தங்காலை கடற்றொழில் துறைமுகத்தின் மேடைக் கட்டின் நீளம் 261 மீற்றராகும்.

மீன் பிடிப் படகுகளுக்கான கடலோர வசதிகளை வழங்கவதும் மீளாய்வு வருடத்திற்குள் நங்கூரமிடும் கட்டணம், எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர் விற்பனை, மற்றும் நுழைவு அனுமதிக் கட்டணம், மனல் விற்கனை மற்றும் வரி போன்றவற்றினால் வருமானம் பெறப்பட்டுள்து.

**14. ஹம்பந்தோட்டை கடற்றொழில் துறைமுகம் (2010)**

ஹம்பந்தோட்டை கடற்றொழில் துறைமுகத்தில் தொட்டியில் பரப்பளவு 5.8 ஹெக்டயர். மற்றும் துறைமுகத்தின் ஆழம் 3.5 மீற்றராவதுடன் நிலப் பரப்பளவு 1.65 ஹெக்டயரையும் கொண்டது. மேடைக் கட்டின் நீளம் 275 மீற்றராகும்.

இத்துறைமுகத்தின் மூலம் கடற்றொழிலாளர்களுக்கு கடலோர வசதிகள், எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர் வழங்குவது மற்றும் மனல் விற்பனை மூலம் வருமானத்தை பெறுகிறது.

### 15. கிரிந்த கடற்றொழில் துறைமுகம் (1985)

3.5 ஹெக்டர் இறங்கு துறையையும், 173 மீற்றர் நீளமான மேடைக் கட்டையும் கொண்ட இந்த துறைமுகம் 3.6 ஹெக்டயர் பரப்பளவும் கொண்ட தொட்டிலையும் கொண்டுள்ளது. துறைமுகம் 2.5 மீற்றர் ஆழத்தையும் கொண்ட தாகும்.

துறைமுகத்தில் மீனவ சமூகத்திற்கு அலுவலக வசதிகள் வழங்குகின்றதுடன் மனல் விற்பனை மூலம் சாதனையான வருமானத்தை பெற்றுள்ளதுடன் மின்சாரம், நீர், பனிக்கட்டி எரிபொருள் மற்றும் நங்கூரமிடும் கட்டணங்கள் மூலம் இத்துறைமுகம் வருமானத்தை பெறுகிறது.

### 16. வாழைச்சேனை கடற்றொழில் துறைமுகம் (2011)

வாழைச்சேனை கடற்றொழில் துறைமுகத்தின் தொட்டில் ஆழத்தை 03 மீற்றர்வரை ஆழமாகும். 275 மீற்றர் நீளமுள்ள மேடை கட்டினமும் உண்டு.
துறைமுகத்தில் மீனவ சமூகத்திற்கு மின்சாரம், நீர், எரிபொருள் வழங்கி வருமானம்
பெறுவதோடு நங்கூரமிடும் கட்டணங்கள், நுழைவு அனுமதிக் கட்டணம் மற்றும் மனல் விற்பனை மூலமும் வருமானம் சம்பாதிக்கின்றது.

### 17. கொட்பே கடற்றொழில் துறைமுகம் (1965)

9.23 ஹெக்டயர் தொட்டில் பரப்பளவைக் மற்றும் 20 ஹெக்டயர் பரப்பளவுள்ள கடல் வலயம் கொண்ட கொட்பே கடற்றொழில் துறைமுகம் நாட்டின் விசாலமான துறைமுகமாகும். பிரதான மேடைக் கட்டில் நீளம் 152 மீற்றா் மற்றும் அகமும் 15 மீற்றர் நீளமான இறங்கு துறையையும் (ஜெட்டி) கொண்ட இத்துறைமுகத்தின் ஆழம் 6 மீற்றா் கொண்டது.

இத்துறைமுகம் மின்சாரம், நீர், எரிபொருள் வழங்குவது மூலமும் நங்கூரமிடும் கட்டணங்கள், நுழைவு அனுமதிக் கட்டணம், மற்றும் குத்தகை வாடகை அறவிடுவது மூலம் வருமானம் சம்பாதிக்கின்றது.

### 18. கற்பிட்டி கடற்றொழில் துறைமுகம் (1968)

கற்பிட்டி கடற்றொழில் துறைமுகத்தின் தொட்டியின் பரப்பளவு 2.00 ஹெக்கடயராகும். துறைமுகத்தின் ஆழம் 2.5 மீற்றராகும் 52.7 மீற்றர் நீறமான இறங்கு துறையும் (ஜெட்டி) 115.8 மீற்றா் மேடைக் கட்டும் 0.49 ஹெக்யடர் பரப்புடைய துறைமுக நிலப் பரப்பும் கற்பிட்டி துறைமுகம் வசம் உள்ளது.

இக் கடற்றொழில் துறைமுகம் கடலோர வசதிகளை வழங்கி மின்சாரம், நீர், எரிபொருள் ஆகியவை விற்பனை மற்றும் குத்தகை வாடகை, நுழைவு அனுமதிக் கட்டணம் போன்றவற்றினால் வரமானம் பெறுகின்றது.

### 19. சிலாபம் கடற்றொழில் துறைமுகம் (2009)

இந்த துறைமுகத்தின் மேடைக் கட்டின் நீளம் 136 மீற்றர் கொண்டதாகும்.

இத்துறைமுகத்தின் வருமான வழிகள் மத்தியில் நங்கூரமிடும் கட்டணங்கள், குத்தகை வாடகை மற்றும் மின்சாரம், நீர், எரிபொருள் வழங்குவது மூலம் பெறப்படும் வருமானமும் அடங்கும்.

**20. நீர்கொழும்பு கடற்றொழில் துறைமுகம் (2007)**

0.4 ஹெக்டயர் நிலப் பரப்பைக் கொண்ட நீர்கொழும்பு கடற்றொழில் துறைமுகத்தின் ஆழம் 3 மீற்றராகும். இறங்கு துறையும் (ஜெட்டி) நீளம் 88 மீற்றராகும்.

13.09.2013 ஆம் திகதி முதல் எல்லா அம்சங்களும் அடங்கிய துறைமுகமாக ஆரம்பிக்கப்பட்ட இத்துறைமுகம் மீனவ சமூகத்திற்கு கடலோர வசதிகளை வழங்கும் அதேவேலை மின்சாரம், நீர், எரிபொருள் ஆகிவை வழங்கி வருமானத்தை பெறுகின்றது.

**21. திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகம் (2013)**

இக் கடற்றொழில் துறைமுகம் சர்வதேச நியமங்களுகமைய நிர்மாணிக்கப்பட்ட சகல உட்கட்டமைப்புகளடங்கிய ஓர் துறைமுகமாகும்.

8.1 ஹெக்டயர் நிலப் பரப்பைக் கொண்ட இத்துறைமுகம் 11.7 ஹெக்டெயா் கட்டினத்தை ( வடக்கு மற்றும் தெற்கு இரண்டு முனைகளை) கொண்டது. துறைமுகத்தின் ஆழம் 3.5 – 5.0 மீற்றராகும். இறங்கு துறையும் (ஜெட்டி) நீளம் 45.0*8 மீற்றராகும்.

வடக்கு முனையில் உள்நாட்டு ஒரு நாட் மற்றும் பல நாட் படகுகள் 450க்கு பாதுகாப்பான நங்கூரமிடும் வசதிகள் வழங்கமடியும்.

தெற்கு முனையில் சர்வதேச சந்தைகளை நோக்கோடு மீன் தறையிறக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுகின்றதுடன், இங்கு வெளிநாட்டு 40 றோலர் படகுகளுக்கு பாதுகாப்பான நங்கூரமிடும் வசதிகள் வழங்கமடியும். இங்கு மீன் தறையிறக்கும் நடைமுறைகள் யாவும் கப்பற் கட்டினத்தை பயன் படுத்தும் Conveyor belt மூலமாகும். இவ்வாரான வசதிகளைக் கொண்ட முதல் கடற்றொழில் துறைமுகம் திக்கோவிட்ட கடற்றொழில் துறைமுகமாகும். தெற்கு முனையில் தறையிறக்கப்படும் மின்கள் சர்வதேச தரத்திற்கமைய உருவாக்க நிர்மானிக்கப் பட்டுள்ள மீன் செய்முறை செய்யும் 03 அலகுகள் இங்கு அடங்குகின்றது.

## 09. கணக்கியல் கொள்கை

### 9.1. வர்த்தகம் மற்றும் கணக்கியல் கொள்கை சம்பந்தமாக விபரம்

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதற்கான நோக்கமாவது, கடற்றொழில் துறைமுகங்களை நிர்மானித்தல், அவைகளைப் பராமரித்தல், ஒருதினக் கலங்கள், பல்தினக் கலங்களுக்கு நங்கூரமிடும் தளங்களின் வசதிகள் போன்றவற்றை வழங்குவதாகும். கடற்றொழில் கலங்களுக்குத் தேவையான எரிபொருள் வசதியை வழங்குவதற்கு எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் துறைமுகத்துக்கு அண்டியதாக செயற்பட்டு வருகிறது. இந்த இரு பிரதான நோக்கங்களுக்கு மேலதிகமாக பாதுகாப்பு சேவை வழங்கல், மற்றும் குத்தகை அடிப்படையில் வசதிகளை வழங்கி வருகிறது. முக்கியமாக கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள், தனியார் பிரிவு மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் பாதுகாப்புச் சேவையை வழங்கி வருகிறது. மணல் வாறுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவை சில துறைமுகங்களை அண்டியதாக நடைபெற்று வருகிறது. கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் இதற்கு அமைய முறைப்படுத்தப்பட்டுள்ளது.

### 9.2 கணக்கியல் ஏற்பாடுகள்

முறையாக கணக்கிடுவதற்கான செயல்முறைக்கு அமைவாக இக் கணக்கு தயாரிக்கப் பட்டுள்ளது. அத்துடன் செலவின் மூலதர்ம முறையின் கீழ் (விரிவாக தெளிபடுத்தும் அடிப்படையில்) இலாபம், செலவு மூலதர்ம அடிப்படையின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது.

### 9.3 கிடைத்தவை/ ஒதுக்கீடு

திறைசேரி மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த உதவி / கிடைத்த மீண்வரும் செலவினம் மற்றும்குறைநிரப்பு ரீதியாக இனம் காணப்பட்டுள்ளதுடன் இதற்கு அயை கணக்கிடப்பட்டுள்ளது.

### 9.4 மூலதனச் செலவுகள்

மூலதனச் செலவு இன்றி வேலைக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. வேறு சில மூலதனச் செலவு வேலையாக செலவு செய்யப்பட்டுள்ளது.

### 9.5 பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள்

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக் கொடை சட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய பணிக் கொடையாக ஒதுக்கிடப்பட்டுள்ளது. அத்துடன் இக்

கூட்டுத்தாபனத்தில் இணைந்து வருடத்துக்கு மேல் சேவை செய்து சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள சகல ஊழியர்களுக்கும் வழங்கப்படும்.

### 9.6 ஆதனம், இயந்திர மற்றும் உபகரண கொள்முதல் செய்தல் (உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய மூலதனச் செலவினம் சம்பந்தமாக)

ஆதனம், இயந்திர மற்றும் உபகரணம் வரையுள்ளது. அத்துடன் தேய்மானம் சரள வழி முறையின் கீழ் எதிர்பார்த்த ஆயுள் கால அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. எமது செலவின அடிப்படையில் உட்படுத்தப்பட்டு ஆரம்பத்தில் கொள்முதல் செய்யப்பட்ட திகதிக்கு அமைய சாதாரண பெறுமதி வரையுள்ள வர்த்தக நடவடிக்கைகளில் கொள்முதல் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் உள்ள குத்தகைக் காலம் அல்லது எதிர்பார்த்த பயன்படுத்தும காலம் ஆகிய இரண்டை விட குறைந்த நிர்ணய அடிப்படையில் சரள ரேகிய முறையை பயன்படுத்தி குத்தகை உரிமையை உரிய முறையில் தேய்மானம் (amortize) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 9.7 தேய்மானம்

நிலையான சொத்துக்களின் தேய்மானம் சரள வழி முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (கொள்முதல் செய்யப்பட்ட மாதம் தொடக்கம் கணக்காய்வு மாதம் வரை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.)

| | |
|---|---|
| • காணி | - |
| • கட்டிடம் | 2.5% |
| • உள்ளக வீதி மற்றும் எல்லை மதில் | 2.5% |
| • இயந்திர உபகரணங்கள் | 10% |
| • உபகரணங்கள்/ அலுவலக உபகரணங்கள் | 10% |
| • மரத் தளபாட் மற்றும் உபகரணங்கள் | 10% |
| • அகழ்வு இயந்திரம் மற்றும் படகு | 10% |
| • இணைய தளம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 20% |
| • மோட்டார் வாகனம் | 20% |

## 9.8 வெளிநாட்டு பணத் தொகை அலகு கொள்முதல்

வெளிநாட்டு பணத்தொகையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொள்முதல், அந்த கொள்முதலின் போது வெளிநாட்டுச் செலவாணியின் முறைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் வெளிநாட்டு பணத் தொகையில் நடைமுறைப்படுத்தப்படும் வங்கிக் கணக்கின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படும் போது அது தேசிய முறைக்கு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் வங்கி கணக்கில் உள்ள மீதியில் வருட இறுதியில் நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டுச் செலவாணி முறையையும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வருட இறுதியின் போது நடைமுறையில் உள்ள வெளிநாட்டுச் செலவாணி முறைக்கு அமைவாக மீண்டும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. வருட இறுதியில் உள்ள இப் பெறுமதி மற்றும் உண்மையான நிலைக்கிடையில் வேறுபடும் கணக்கில் இலாபம் அல்லது நட்டம் இனம் காணப்பட்டுள்ளது.

## 9.9 வரியிடல்

### வருமான வரி

நடப்பு வருடத்துக்கான வருமான வரியாக வருமானத்துக்கு ஒதுக்கப்படவில்லை.

## 10. நிதிக் கட்டமைப்பு

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூடுத்தாபனம்
நிதி நிலமை பற்றிய கூற்று

| டிசம்பர் 31 தினத்திற்கு | குறிப்பு | 2014<br>ருபா | 2013<br>ருபா | 1-Jan-13<br>ருபா | 2013 நெகிழ்த்திய<br>ருபா |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| காணி, இயந்திர உபகரணங்கள் | 1 | 5,161,341,734 | 4,473,127,854 | 4,562,198,461 | 4,473,127,854 |
| மூலதன முடிவுபெறாத வேலைகள் | 2 | 5,268,524 | 6,988,609 | 6,327,289 | 6,988,609 |
| தள்ளிபோட வேண்டிய நிலுவை | | 81,769,596 | 81,769,596 | 81,769,596 | 81,769,596 |
| | | **5,248,379,854** | **4,561,886,059** | **4,650,295,347** | **4,561,886,059** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| கையிருப்பு | 3 | 39,992,312 | 48,245,900 | 49,101,884 | 48,245,900 |
| வர்தக மற்றும் ஏனைய பெறவேண்டிவைகள் | 3 | 304,455,808 | 260,112,957 | 210,196,836 | 260,112,957 |
| முற்பணங்கள | 3 | 62,944,945 | 72,881,532 | 63,887,796 | 72,881,532 |
| வங்கி நிலுவை | 3 | 25,421,991 | (23,807,545) | 798,734 | (23,807,545) |
| ரொக்கப் பணமும் அதற்கு சமமானவையும் | 3 | 21,518,510 | 24,224,842 | 24,270,452 | 24,224,842 |
| | | **454,333,566** | **381,657,686** | **348,255,701** | **381,657,686** |
| **மொத்தச் சொத்துக்கன்** | | **5,702,713,420** | **4,943,543,745** | **4,998,551,048** | **4,943,543,745** |
| **மூலதனம் மற்றும் கடண்பாடுகள்** | | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்** | | | | | |
| செலுத்திய மூலதனம் | | 350,099,843 | 350,099,843 | 350,099,843 | 350,099,843 |
| மூலதன பெறுகைகள் | 4 | 1,047,950,983 | 1,006,589,223 | 1,152,035,460 | 1,132,127,290 |
| ஒதுக்கீடுகள் | 5 | 5,998,355,547 | 5,178,924,020 | 5,096,108,234 | 5,178,924,020 |
| பெறுகைகள் | | 2,215,769 | 2,215,769 | 2,215,769 | 2,215,769 |
| திரட்டிய இலாபம் (நட்டம்) | | (2,187,289,619) | (2,050,489,666) | (2,008,739,407) | (2,176,027,734) |
| **மொத்தச் முலதனம்** | | **5,211,332,522** | **4,487,339,189** | **4,591,719,899** | **4,487,339,188** |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | | | |
| தள்ளிபோட்ட பொறுப்பு | | 1,653,400 | 1,653,400 | 1,653,400 | 1,653,400 |
| ஒரு வருடத்திற்க்கு பிறகு – நிதி குத்தகை | 6 | 2,398,985 | 5,264,349 | 8,757,315 | 5,264,349 |
| ஓய்வு பணிக்கொடை ஏற்பாடு | 7 | 149,919,618 | 130,847,770 | 110,500,139 | 130,847,770 |
| | | **153,972,003** | **137,765,519** | **120,910,854** | **137,765,519** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்துகை | 8 | 335,247,246 | 312,737,660 | 279,643,908 | 312,737,660 |
| ஒரு வருடத்தினுள் – நிதி குத்தகை பொறுப்பு | 6 | 2,161,649 | 5,701,377 | 6,276,387 | 5,701,377 |
| | | **337,408,895** | **318,439,037** | **285,920,295** | **318,439,037** |
| **மொத்தச் முலதனமும் பொறுப்புகளும்** | | **5,702,713,420** | **4,943,543,745** | **4,998,551,048** | **4,943,543,745** |

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டதிற்கு உட்பட்ட வகையில் நிதி அறிக்கைகள் தயாரிக்கபட்டுள்ளன என்று இத்தால் நான் உறுதிசெய் கின்றேன்.

.....................................
**நிதி முகாமையாளர்**

இநத நிதி அறிக்கை தயாரிப்பதற்கும் சமர்பணதிற்கும்பணிப்பாளர்களே பொறுப்பாவார். சுபையின் சார்பில் சபைக்காக கைசாத்திடப்பட்டது.

.............................
தலைவர்

.............................
பொது முகாமையாளர்

*Ceylon Fishery Harbours Corporation*
*Statement of Financial Position*

Page No:-01

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூடுத்தாபனம்
நிதி நிலமை பற்றிய கூற்று

| டிசம்பர் 31 தினத்திற்கு | குறிப்பு | 2014<br>ரூபா | 2013<br>ரூபா | 2013 நெகிழ்த்திய<br>ரூபா |
|---|---|---|---|---|
| வருவாய் - மீண்டும்வரும் திறைசேரி கொடை | | 313,400,000 | 108,000,000 | 108,000,000 |
| | | | | - |
| வருவாய் - மூலதன கொடை மீண்டும்வரும் செலவினங்கள் | | 54,651,981 | 55,441,170 | 55,441,170 |
| | | | | - |
| வாகன விற்பனை மூலம் பெற்ற இலாபம் | | 2,778,629 | - | - |
| | | | | - |
| தொழிற்பாட்டு பெறுபேறுகள் | 9 | 42,667,125 | 293,162,663 | 167,624,595 |
| | | 413,497,735 | 456,603,833 | 331,065,765 |
| ஊழியர் கிரயம் | 10 | (221,895,059) | (195,030,798) | (195,030,798) |
| <u>ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள்</u> | | | | |
| நிறுவனச் செலவீனம | 11 | (11,414,004) | (10,773,544) | (10,773,544) |
| நிர்வாகச் செவீனம | 12 | (260,347,488) | (248,867,716) | (248,867,716) |
| திருத்தல், பராமரிப்பு செலவீனம் | 13 | (46,951,177) | (29,935,298) | (29,935,298) |
| செயற்பாட்டு இலாபம் (நட்டம்) | | (127,109,993) | (28,003,523) | (153,541,591) |
| நிதிச் செலவீனம் | 14 | (8,924,747) | (13,507,848) | (13,507,848) |
| <u>செயற்பாடற்ற செலவினங்கள்</u> | | | | |
| சேததுக்குள்ளான வாகனகள்மூலம் ஏற்பட்ட நட்டம் | | (826,554) | - | - |
| வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | | (136,861,294) | (41,511,370) | (167,049,439) |
| வரி செலவீனம | | - | - | |
| வரிக்கு பின் வருடத்துக்கான இலாபம் (நட்டம்) | | (136,861,294) | (41,511,370) | (167,049,439) |
| வருடத்துக்கான இலாபம் (நட்டம்) | | (136,861,294) | (41,511,370) | (167,049,439) |

**இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூடுத்தாபனம்**
**2014 ஆண்டிற்க்கான காசுப்பாயச்சல் கூற்று**

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **நடைமுறை நடவடிக்கைகளின் காசோட்டம்** | | |
| வரிக்கு முன் தேறிய இலாபம்/நட்டம் | (136,861,294) | (41,511,370) |
| இலாபம்/நட்டத்திற்கான முந்திய வருட நேர்படுத்தல் | 61,340 | (238,889) |
| **நேர்ப்படுத்தல் :** | | |
| தேய்மானம் | 166,922,217 | 173,225,325 |
| ஒய்வுக்கால பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு | 22,850,563 | 27,234,547 |
| வட்டி செலவினங்கள் | 6,485,293 | 7,808,262 |
| **பயன்படும் மூலதனத்தின் மாற்றங்கள்** | | |
| வர்தக மற்றும் ஏனைய பெறுகைகளின் அதிகரிப்பு/ குறைவு | (44,342,851) | (49,916,121) |
| தொகைகளின் அதிகரிப்பு / குறைதல் | 8,253,588 | 855,984 |
| வர்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/ குறைவு | 22,509,586 | 33,093,752 |
| நடைமுறை குத்தகைகளின் பொறுப்பு அதிகரிப்பு / குறைதல் | (3,539,728) | (575,010) |
| முன் கொடுப்பனவுகள் | 9,936,587 | (8,993,736) |
| **செயற்பாட்டு மூலம் பெறப்பட்ட காசுப் பாய்ச்சல** | **52,275,301** | **140,982,743** |
| செலுத்திய வட்டி | (6,485,293) | (7,808,262) |
| செலுத்திய பணிக்கொடை | (3,778,715) | (6,886,916) |
| **செயற்பாட்டு நடவடிக்கை மூலம் பெறப்பட்ட தேறிய காசு** | **42,011,293** | **126,287,565** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கை மூலம் பெறப்பட்ட தேறிய காசுப் பாச்சல்** | | |
| | | |
| சொத்துகள், இயந்திர உபகரணங்கள் கொள்முதல் | (853,416,012) | (84,816,037) |
| ஒதுக்கீடுகள் | 819,431,527 | 82,815,786 |
| முதலீட்டுகள் - முலதன காசு | 100,000,000 | 76,000,000 |
| கழி - முலதன தேய்மானம் | (58,638,240) | (221,446,237) |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்காக உபயோகித்த தேறிய காசு** | **7,377,274** | **(147,446,488)** |
| | | |
| **நிதி நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட காசுப் பாய்ச்சல** | | |
| நிதி குத்தகை பொருப்புகள் | (2,865,364) | (3,492,966) |
| | | |
| **நிதி நடவடிக்கைகளுக்காக உபயோகித்த தேறிய காசு** | **(2,865,364)** | **(3,492,966)** |
| | | |
| **காசும் காசுக்கு சமமானவைகளில் அதிகரிப்பு/ குறைவு** | **46,523,204** | **(24,651,889)** |
